**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் - 2021**

---

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் 2021 செப்தெம்பர் 30 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றக்கள் மீதான கணக்காய்வு சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 2639-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2639∴2640 (எஸ்எப்) எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஐ உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2012 நவம்பர் 19 ஆம் திகதிய 2890 (எஸ்ஆர்ஜ) எஸ்எப் மற்றும் 2891 (எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின ஐஏ ஆம் உறுபபுறையின் 4.04 மற்றும் 4.05 ஆம் பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னால் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. தேசிய மட்டத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை முகாமை செய்து ஒருங்கிணைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பாக உள்ளது. வட மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 170 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகளை புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 16,790 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 146 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா. 14,950 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 130 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. மேலும், 2012 நவம்பர் 12 ஆம் திகதிய 2890 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) ஆம் இலக்க மேலதிக நிதியளித்தல் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா. 8,840 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 68 மில்லியனை வழங்கவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. அதில் ரூபா 4,420 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 34 மில்லியன் வட மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவீருத்தி அதிகார சபைகளிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேலும் 2012 நவம்பர் 12 ஆம் திகதிய 2891 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ரூபா. 3,900 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 30 மில்லியன் வட மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஆரம்ப கடன் உடன்படிக்கையின் கீழ் 2010 ஒக்தோபர் 22 இல் செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்திருந்தது. மேலதிக நிதியளித்தல் உடன்படிக்கையின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 மே 13 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர், 2021 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2021 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான

பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டமானது கலைத்தல் கணக்குகளை 30 செப்டம்பர் 2021 அளவில் தயாரித்திருப்பினும் மொத்தம் ரூபா. 1.35 மில்லியன் முற்கொடுப்பனவு மற்றும் முற்பணமாகவும் மற்றும் மொத்தம் ரூபா. 1.14 மில்லியன் வைப்புக்களாகவும் நிதிக்கூற்றுக்களில் முறையே நடைமுறைச் சொத்து மற்றும் நடைமுறைப் பொறுப்பின் கீழ் தீர்ப்பனவு செய்யப்படாமல் காட்டப்பட்டுள்ளது. | ஏனைய வருமானமாக பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட நிதிகளை இத்தொகை குறிப்பிடுகின்றது. இம்மொத்த தொகையனது பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. | செயற்திட்டம் நிறைவடைவதற்கு முன்பாக அனைத்து பொறுப்புக்களும் பெற வேண்டியவைகளும் தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். |

### 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| நிதிப்பிரமானங்கள் 134(3) மற்றும் 26 யூலை 2010 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்படவில்லை. | நாங்கள் இவ்விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய உள்ளக கணக்காய்வு பிரிவினரிடமிருந்து விசாரித்த போது ஆர்டிஏ தலைவரின் வழிகாட்டலின் கீழ் அவர்கள் வருவதாகவும் அதனால் ஆர்டிஏ தலைவரின் வழிகாட்டல் வழங்கப்பட்டால் மாத்திரமே பிஎம்யு இன் கணக்காய்வை மேற்கொள்ள முடியும் என்று அவர்கள் எங்களிடம் தெரிவித்தார்கள். | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய உள்ளக கணக்காய்வு பிரிவினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முன்னேற்ற நடவடிக்கைகள்

கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைவாக புனரமைக்கப்பட்ட 03 தேசிய வீதிகளின் 03 வருட செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு பணிகள் உட்பட 10 பொதிகளின் கீழ் வழங்கப்பட்ட வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 06 தேசிய வீதிகளின் 170 கிலோமீற்றர் பிரிவுகளின் புனரமைப்பு பணிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும், ஏனைய 02 தேசிய வீதிகளின் புனமைப்பக்கான ஒப்பந்தங்கள் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு ஆரம்ப அமுலாக்கல் திட்டத்தின் கீழ் வீதிகளை புனரமைப்பது தொடர்பான சேமிப்புக்களை பயன்படுத்தியதன் மூலம் 2016 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டது. மேலும், மேலதிக நிதி ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 07 தேசிய வீதிகளின் ஏனைய பிரிவுகளின் 121.98 கிலோமீற்றர் புனரமைப்பு பணிகள் 31 டிசம்பர் 2016 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. கடன்களின் சேமிப்புக்களில், யு 009 கண்டி யாழ்ப்பாண வீதியினை புனரமைப்பதற்கு புதிய ஒப்பந்தமொன்று 28 ஏப்ரல் 2017 இல் வழங்கப்பட்டிருந்ததடன் 31 ஒக்டோபர் 2018 இல் உள்ளவாறு றம்பேவ தொடக்கம் மதவாச்சி வரையிலான 9.64 கிலோமீற்றரிலான வீதிப் பிரிவு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. மேலும், மதவாச்சி-ஹொரவ்பதான வீதி புனரமைப்பதற்காக அமைச்சரவை மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து செயற்திட்டம் அங்கீகாரத்தை பெற்றிருந்ததுடன் அவை தொடர்பாக இரண்டு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், புனரமைப்பு பணிகள் 2020 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் மூலம் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் 12 தேசிய வீதி ஒப்பந்தங்களுக்காக 2021 ஆண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா. 11,609.72 மில்லியன் செலவளிக்கப்பட்டன. பெறுகை வழிகாட்டல்களின் பந்தி 8.13.4 இன் பிரகாரம் செயற்திட்ட முரண் கிரயங்களை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், இதன் மூலம் ரூபா. 480.7 மில்லியன் தொகை முரணாக செலுத்தப்பட்டுள்ளதுடன் இதில் ரூபா. 47.62 மில்லியன் கட்டட நிர்மானத்திற்காக செலுத்தப்பட்டுள்ளதுடன் வீதியின் நிர்மானத்திற்கு தொடர்பில்லாத வாகனங்கள் கொள்வனவிற்காக மேலும் ரூபா. 3.08 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தன. | ஒப்பந்தத்தில் காணப்பட்ட ஏற்பாட்டு தொகையின் கீழ் அந்த வாகனங்களானது கொள்வனவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், ஒப்பந்தத்தினுள் காணப்படும் மொத்தத்தை விட விஞ்சியதனால் முரண்கள் தோன்றிது. வாகனங்களானது ஒப்பந்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக்காக மாத்திரமே வழங்கப்பட்டன. ஒப்பந்தங்களின் இறுதியில், அனைத்து வாகனங்களும் ஆர்டிஏ க்கு கையளிக்கப்பட்டன. | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் செயற்திட்டத்தின் தேவைகள் அடையாளம் காணப்பட வேண்டும். |